අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk


මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/04/59/03/02/01 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2019.02. 19

அமைச்சுச் சுற்றறிக்கை : 10/2019

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

சகல பீடாதிபதிகள்,

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பினை அமுல்படுத்தல்.**

இலக்கம் 1925/37 மற்றும் 2015.07.28 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியலாளர் சேவையின் பிரமாணக் குறிப்பிற்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் கீழ்க் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளை உரியாத்திக் கொள்வதற்காக அரச சேவை ஆணைக்குழு சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

I. இலக்கம் 1070/13 மற்றும் 1999.03.11 ஆம் திகதிய பழைய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய 3 ஆம் வகுப்பிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட முதலாவது வினைத்திறன் தடைதாண்டலை பூரணப்படுத்தாததற்கமைய சம்பளப் படி உயர்வு இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை சம்பளப் படி உயர்வு, அவ் உத்தியோகத்தர்கள் இலக்கம் 1925/37 மற்றும் 2015.07.28 ஆம் திகதிய புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் முதலாவது வினைத்திறன் தடைதாண்டலை பூர்த்தி செய்யும் வரை இடைநிறுத்தப்பட்டிருக்கும்.

II. இலக்கம் 1070/13 மற்றும் 1999.03.11 ஆம் திகதிய பழைய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய 3 ஆம் வகுப்பிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டலை பூர்த்தி செய்யாததற்கிணங்க சம்பளப் படி உயர்வு இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் சம்பளப் படி உயர்வு புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் அமுல்படுத்தப்பட்டுள்ள 2015.07.28 ஆம் திகதி தொடக்கம் மீளச் செலுத்தப்படவில்லை.

III. இலக்கம் 1070/13 மற்றும் 1999.03.11 ஆம் திகதிய பழைய சேவைப் பிரமாணக் குறிப்பிற்மைய 3 ஆம் வகுப்பிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு இணைப்பு மொழித் தேவையினை பூர்த்தி செய்யாமைக்கு இணங்க 2-II தரத்திற்கு பதவி உயர்த்தப்படாத பதவி உயர்வு பெறாத பிரிவில் உயர்ந்தபட்ச நிலைத்து நிற்பதற்கமைய சம்பளப்படி உயர்வு பெறாத உத்தியோகத்தர்கள் அச் சேவைக் காலத்திற்குள் திருப்திகரமான அல்லது அதனை விட உயரிய மட்டத்திலான செயற்சாதனையினை பெற்றிருப்பின் அச் சேவைக்காலத்தை திருப்திகரமான சேவைக் காலத்தின் பகுதியாக கருத முடியும்.

IV. இலக்கம் 1070/13 மற்றும் 1999.03.11 ஆம் திகதிய பழைய சேவைப் பிரமாணக் குறிப்பின் 18 வது வாசகத்திற்கமைய 2-II தரத்திற்குக் உள்ளீர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் அச் சேவைப் பிரமாணக் குறிப்பில் 2-II தரத்திற்கு உரிய வினைத்திறன் தடைதாண்டலான எழுத்து மூலப் பரீட்சையினை பூர்த்தி செய்திருப்பின் அவ் உத்தியோகத்தர்கள் இலக்கம் 1925/37 மற்றும் 2015.07.28 திகதிய புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் II ஆம் தரத்தின்


ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

உத்தியோகத்தர்களுக்கு உரியதான வினைத்திறன் தடைதாண்டலை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களாக கருதி உரிய நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

V. இலக்கம் 1070/13 மற்றும் 1999.03.11 ஆம் திகதிய பழைய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய 2000/2001 ஆண்டுகளில் 3 ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு உரிய பாடத் துறையில் தாமதமாக வழங்கப்பட்டுள்ளமையினால் அவ் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியிலாக அமையக்கூடிய வகையில் "கல்வி அல்லது உரிய பாடம் தொடர்பான பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்" என்ற தகைமைக்குப் பதிலாக புதிய உத்தியோகத்தர்கள் பெற்றுள்ள பட்டப்பின் பட்டத் தகைமையை பதவி உயர்வுத் தகைமையாகக் கருத முடியும்.

இச் சுற்றறிக்கை அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கமைய வெளியிடப்பட்டுள்ளது.

**பத்மசிறி ஜயமான்ன**

செயலாளர்

கல்வி அமைச்சு